

# சூழ்நிலையியல்

## வகுப்பு IV

### பகுதி 1

**ENVIRONMENTAL SCIENCE**
**STD IV**
**Part - 1**
**Tamil Medium**

கேரளஅரசு
பொதுக்கல்வித்துறை

தயாரித்தது

**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும்**
**பயிற்சி நிறுவனம் (SCERT) கேரளம்**
**2025**





## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**State Council of Educational Research and Training (SCERT) Kerala**
Vidyabhavan, Poojappura, Thiruvananthapuram, Kerala - 695 012
Website www.scert.kerala.gov.in
e-mail scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala



நண்பர்களே

நாம் வாழ்கின்ற பூமியும் அதன் அழகும் நம்மை ஆச்சரியம் கொள்ளச் செய்வதாகும். அதை அறிந்து கொள்ளவும் தேடவும் ஊக்கம் அளிக்கின்ற எத்தனையோ அதிசயங்கள் நம்மைச் சுற்றிலும் உள்ளன. பல்வேறு சுற்றுச் சூழல்களில் ஒன்றையொன்று சார்ந்து வாழும் ஏராளமான உயிரினங்கள் … இயற்கையின் வண்ண வேற்றுமைகளைத் தருகின்ற பறவைகள்…. எல்லையில்லா ஆகாயமும் எண்ணமற்ற விண்கோள்களும்…. சுற்றுப்புறத்தில் உள்ள பல வடிவிலான பொருட்கள்… இவற்றை உற்றுநோக்கியும் தகவல்களைத் திரட்டியும் ஒப்பீடு செய்தும் ஆய்வுகளில் ஈடுபட்டும் சுயமாக அறிவை உருவாக்க இப்புத்தகம் உங்களுக்கு உதவும். அத்துடன் நமது நாட்டையும் சமூகத்தையும் அறிந்து கொள்வதற்கான ஏராளமான வாய்ப்புகளும் இப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. சுற்றுச் சூழலையும் பிறந்த நாட்டையும் பாதுகாப்பவர்களாக மாறுவதற்கு புதிய அறிவுகள் உங்களுக்கு உதவட்டும்.

வாழ்த்துகளுடன்

**முனைவர் ஜெயபிரகாஷ் ஆர்.கெ.**

இயக்குநர்

எஸ்.சி.இ.ஆர்.டி



# Textbook Development Team

**Advisor**

**Dr. Salahudheen Kunju A.**
Principal (Rtd.), University College,
Thiruvananthapuram

**Chairperson**

**Dr. Theresa Susan A.**
Professor, Head & Dean (Rtd.)
Department of Education, University of Kerala.

**Experts**

**Nandakumar B.**
Principal (Rtd.),
DIET Ernakulam

**Mukundan Pottamel**
Senior Lecturer (Rtd.)
DIET Malappuram

**Dr. K.Geetha Lekshmi**
Senior Lecturer (Rtd.),
DIET Thiruvananthapuram

**Members**

**Rajendrakumar N.S.**
B.P.O. (Rtd.), B.R.C. Konni, Pathanamthitta

**Aji T.S.**
Headmaster (Rtd.), Govt. L.P.School,
Oroottambalam, Thiruvananthapuram

**Dhanya P.J.**
L.P.S.T., Govt. L.P. School, Amarambalam,
Malappuram

**Thomas P.**
L.P.S.T., Govt. L.P. School, Kavalam,
Alappuzha

**Manilal T.L.**
U.P.S.T. (Rtd.), Govt. H.S., Adimali, Idukki

**Reeshma T.**
U.P.S.T., M.D.P.S.U.P. School, Ezhoor,
Thirur, Malappuram

**Rekha P.**
U.P.S.T., A.U.P. School, Perumbara,
Malappuram

**Raseena Salam**
L.P.S.T. Govt. L.P. School,
Panmanamanayil, Chavara, Kollam

**Artists**

**Suhail Raj**
Student, S.B.H.S.S., Changanasseri

**Gireesh Peruva**
Artist, Govt. U.P. School, Thalappuzha,
Wayanad

**C.N.Raju**
Artist (Rtd.), K.B.P.S. Kakkanad,
Ernakulam

## TAMIL VERSION

**Experts**

**Dr. S. Rajendran**
Professor in Tamil (Rtd) University College,
Thiruvananthapuram

**Dr. G. Santhosh kumar**
Curriculam Committee Member

**Members**

**R. Russelraj**
(Rtd) HM ALPS Arivikad, Munnar, Idukki

**John Elkaiah**
PD Tr (Rtd) Govt: S.S.L.P.S Karamana
Thiruvananthapuram

**Dhanalekshmy. S**
UPST Govt: T.T.I. KOLLAM

**SANNY.I**
HSST ( Jr) (HG) Tamil GTHSS Chalai
Thiruvananthapuram

**C. Manivannan**
PDTr (Rtd) Govt: Tamil L.P.S. Chalai,
Thiruvananthapuram

**J. Jasmine**
HSST Tamil (Rtd) Govt: C.P.M. Peermadu

**James Insuly Oliver. G.**
HSA (Rtd.) Govt. Central HS East Fort,
Thiruvananthapuram.

**Academic Co-ordinator**

**Dr. Bindu S.**
Research Officer, SCERT

State Council of Educational Research and Training (SCERT) Kerala
Vidyabhavan, Poojappura, Thiruvananthapuram - 695 012

# உள்ளடக்கம்




1. உயிரினங்களும் சுற்றுப்புறமும் 07

2. இந்தியா எனது நாடு 26

3. சிறகுள்ள நண்பர்கள் 48

4. கலைகளின் கேரளம் 68


இப்புத்தகத்தில் வசதிக்காகச் சில அடையாளங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

- துணை வாசிப்பு
- ICT வாய்ப்பு
- மதிப்பிடலாம்
- தொடர் செயல்பாடுகள்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

# உயிரினங்களும் சுற்றுப்புறமும் 1

20.08.2024

சுற்றுப்புறத்தை உற்றுநோக்க இன்று நாங்கள் தேர்ந்தெடுத்தது ஆம்பல் குளமாகும். வயல் வரப்பு வழியாகப் பயணம் செய்து குளக்கரையை அடைந்தோம். குளக்கரையிலுள்ள மரத்தின் நிழலிலிருந்து உற்றுநோக்க தொடங்கினோம். நன்கு தெளிந்த நீர், ஆம்பல்கள் பூத்து நின்றன. சில நீர்த்தாவரங்களும், பாசிகளும், மரத்திலிருந்து உதிர்ந்த இலைகளும் தண்ணீரில் காணப்பட்டன. குளக்கரையில் புற்களும், கொடிகளும், குற்றிச்செடிகளும் வளர்ந்து நிற்கின்றன.




7

குளக்கரையில் உள்ள நாவல் மரத்தில், கிளிகள், அணில், ஓணான், சிலந்தி போன்றவையும் எறும்புகள் அடங்கிய சிறு உயிரினங்களும் இருந்தன. குளத்தில் ஏராளம் மீன்களும் இருந்தன. அவை இடையிடையே தண்ணீருக்கு மேல்வந்து வாயைத் திறக்கும். தவளை, தலைப்பிரட்டை, நண்டு, நத்தை, நீர்க்கோலிகள், போன்ற நீர்வாழ் உயிரினங்களும் ஆம்பல் குளத்தில் இருந்தன. நாங்கள் சிறுகற்களைக் குளத்தில் இட்டு வட்ட வட்ட வடிவிலான அலைகளை ஏற்படுத்தி விளையாடினோம். குளக்கரையின் குளிர்மையில் நேரம் போனதே தெரியவில்லை.

ரைனாவின் உற்றுநோக்கல் குறிப்பை வாசித்தீர்களல்லவா?

குளத்தில் என்னென்ன உயிரினங்களைப் பார்த்தீர்கள்?

மரத்தில் என்னென்ன உயிரினங்கள் வாழ்கின்றன?

எல்லா உயிரினங்களுக்கும் வாழ இடம் தேவை அல்லவா?

தண்ணீரில் வாழும் உயிரினங்களுக்கு நிலத்தில் வாழ இயலுமா?

மீன்களால் ஏன் நிலத்தில் வாழ இயலவில்லை?

நீங்கள் ஊகித்துக் கூறுங்கள்.

மீன்கள் தண்ணீரில் வாழ்வதற்கு உதவுகின்ற என்னென்ன சிறப்பு இயல்புகளை நீங்கள் உற்று நோக்கியுள்ளீர்கள்?

ஒரு மீனின் படம் வரையலாமா?



மீனின் வடிவம் எப்படி உள்ளது?

மீனின் இவ்வடிவம் தண்ணீரில் நீந்துவதற்கு எவ்வாறு உதவுகிறது?

படகுகளின் வடிவத்தை உற்று நோக்கவும்.





தண்ணீரில் பயணிக்க இவற்றில் பொருத்தமான வடிவம் எது?

மீன்கள் நீந்துவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

அவை எவ்வாறு பயணதிசையை மாற்றுகின்றன?

அவற்றின் செதில்கள் எவ்வாறு அமைந்துள்ளன?

மீன்கள் சுவாசிக்க உதவும் உடல் உறுப்பு எது?

மீன்கள் தண்ணீரில் வாழ உதவுகின்ற தகவமைப்புகள் என்னென்ன?

மீனின் உடல்வடிவம், துடுப்புகள், வால், செதில்களின் ஒழுங்கமைப்பு, வழுவழுப்புத் தன்மை ஆகியவை மீன்கள் தண்ணீரில் நீந்துவதற்கு உதவுகின்றன. செவுள்களின் உதவியுடன் மீன்கள் சுவாசிக்கின்றன.

மீன்களின் பல்வேறு தகவமைப்புகளைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? சில தாவரங்களையும் அவற்றின் சிறப்புகளையும் அறிந்து கொள்வோம்.

படங்களை உற்றுநோக்குங்கள்.





இந்தத் தாவரங்களின் சிறப்பியல்புகள் என்னென்ன?

தண்டின் சிறப்பியல்பு என்ன?

பிற செடிகளிலிருந்து வேறுபட்ட என்னென்ன சிறப்பியல்புகள் இவற்றிற்கு உள்ளன? கலந்துரையாடி **எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில்** எழுதுங்கள்.

## பாலைவனத் தாவரங்கள் (வறண்ட நிலத்தாவரங்கள்)

பாலைவனத் தாவரங்கள் இலைகள் இல்லாததும், சிறிய இலைகள் உள்ளதும், முட்கள் உடையதாகவும் இருக்கும். தண்டுகள் தடிமன் ஆனதும், பச்சை நிறம் உள்ளதும், தண்ணீரைச் சேமித்து வைக்கும் திறன் உள்ளதும் ஆகும்.இவற்றின் தண்டுகளில் மெழுகு போன்ற ஒரு பசை பொதிந்து காணப்படுகிறது. இந்தப் பசைத்தன்மை நீர் இழப்பைத்தடுக்க உதவுகிறது. மிகவும் ஆழமாக வேரூன்றும் திறன் கொண்ட இவ்வேர்கள் ஆழத்திலிருந்து கூட நீரை உறிஞ்சும். இவ்வகைத் தாவரங்கள் பாலைவனத் தாவரங்கள் (வறண்ட நிலத்தாவரங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட சிறப்பியல்புகள் அனைத்தும் பாலைவனத்தில் வாழ இவற்றிற்கு உகந்ததாகின்றன.

## தகவமைப்பு (Adaptation)

தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் அவை வாழும் சூழலுக்கு ஏற்ற உடல் சிறப்பியல்புகள் உள்ளன. ஓர் உயிரினம் அதன் வாழ்விடத்தில் வாழ உதவும் உடல் சிறப்பியல்பு தகவமைப்பு ஆகும்.




ஆம்பல், தவளை இவற்றிற்கு இடையிலான உரையாடலைக் கவனித்தீர்கள் அல்லவா.

அவற்றின் பிற தகவமைப்புகள் பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

| ஆம்பல் | தவளை |
|---|---|
| • | • |
| • | • |

படங்களை உற்றுநோக்குங்கள்.

படத்தில் உள்ள உயிரினங்கள் எங்கெங்கு வாழ்கின்றன?







உங்களுக்குத் தெரிந்த பிற உயிரினங்களின் பெயர்களை எழுதி அட்டவணையை நிரப்புங்கள்.

| நிலத்தில் வாழ்பவை | நீரில் வாழ்பவை | நிலத்திலும் நீரிலும் வாழ்பவை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

முழுமைப்படுத்திய அட்டவணையிலுள்ள தகவல்களை பகுப்பாய்வுச் செய்து முடிவுகளை எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில் எழுதுங்கள்.

பாலைவனத்திலும் துருவப்பகுதிகளிலும் உயிரினங்கள் வாழ்கின்றன அல்லவா! அவற்றிற்கு என்னென்ன தகவமைப்புகள் உள்ளன?






ஒட்டகத்திற்கும் பென்குயினிற்கும் உள்ள பிற தகவமைப்புகளைக் கண்டறிந்து கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

| ஒட்டகம் | பென்குயின் |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |

## தண்ணீர் குடிக்காத ஒரு வாழ்க்கை

### கங்காரு எலி



பாலைவனத்தில் காணப்படும் ஒரு சிறிய உயிரினம் கங்காரு எலி. பாலைவனத்தில் வாழ்வதற்கு ஏற்ற பல தகவமைப்புகள் இதற்கு உள்ளன. பகல் நேர வெப்பத்தை எதிர்கொள்வதற்காக மிகவும் ஆழமான வளைகளை உருவாக்கி, அதற்குள் வாழ்கிறது. இரவு நேரங்களில்தான் இரையைத் தேடுகின்றன. இவற்றிற்கு சிறிதளவு தண்ணீர்கூட குடிக்காமல் வாழ இயலும். முக்கிய உணவுகளான தானியங்கள், விதைகள் போன்றவற்றிலிருந்தும், உடலில் உள்ள கொழுப்பில் இருந்தும் இவற்றிற்குத் தேவையான நீர் கிடைக்கிறது. வியர்வை, சிறுநீர் வாயிலான தண்ணீர் இழப்பு மிகக் குறைவாகும். நீளமான பின் கால்களைப் பயன்படுத்திக் கங்காருவைப் போல் குதித்துக் குதித்துச் செல்லும். கன்னத்தில் உள்ள பையில் தானியங்களையும், விதைகளையும் சேகரித்து வைக்கவும் இயலும்.




வயலில் இருந்து கொக்கிற்கு என்னென்ன கிடைக்கிறது?

- சிறிய உயிரினங்கள்
-
-

குளத்தில் இருந்து மீனுக்கு என்னென்ன கிடைக்கிறது?

- வாழிடம்
-
-

ஓர் உயிரினம் வாழ்கின்ற சுற்றுப்புறம் அதன் வாழிடமாகும் (Habitat). உயிரினத்தின் நிலைப்பேற்றிற்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் வாழிடத்தில் உள்ளன. குளம், ஆறு, வயல் ஆகியன வாழிடங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

வாழிடங்களுக்கான கூடுதல் எடுத்துக்காட்டுகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.





- மரம்
-
-

## பலவித வாழிடங்கள்

படத்தை உற்றுநோக்குங்கள்



படத்தில் காணப்படும் பல்வேறு வாழிடங்கள் எவை? பெயர்களை எழுதுங்கள்.

வயல் ஒரு வாழிடம் அல்லவா? அதில் உயிருள்ள, உயிரற்ற ஏராளம் காரணிகள் உள்ளன. அவை என்னென்ன? கலந்துரையாடி எழுதுங்கள்.

| உயிருள்ளவை | உயிரற்றவை |
|---|---|
| • தாவரங்கள் | • மண் |
| • | • |
| • | • |

இயற்கையான வாழிடங்களும் மனிதனால் உருவாக்கப்பட்ட வாழிடங்களும் உள்ளன. காடு இயற்கையான வாழிடத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பள்ளிக்கூடத்திலுள்ள பல்லுயிர்பூங்காவோ?

இயற்கை வாழிடங்களுக்கும் மனிதனால் உருவாக்கப்பட்ட வாழிடங்களுக்கும் மேலும் பல எடுத்துக்காட்டுகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.

| இயற்கை வாழிடங்கள் | மனிதனால் உருவாக்கப்பட்ட வாழிடங்கள் |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |

ஒரு வாழிடத்தில் உயிருள்ள, உயிரற்ற பல காரணிகள் உள்ளன. தாவரங்கள், உயிரினங்கள், நுண்ணுயிரிகள் போன்றவை உயிருள்ள காரணிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.. மண், காற்று, நீர், சூரியஒளி போன்றவை உயிரற்ற காரணிகளில் முக்கியமானவை.

காற்று, நீர், மண், சூரிய ஒளி போன்ற உயிரற்ற காரணிகளை உயிரினங்கள் சார்ந்திருக்கின்றன அல்லவா? இதைப்போன்று உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதும் உண்டு. ஒரே பகுதியில் உயிருள்ளவையும் உயிரற்றவையும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கின்றன.

## படத்தை உற்று நோக்குங்கள்.

யார் யாரைச் சார்ந்திருக்கிறார்கள்? வரைந்து இணைத்துக் குறிப்பு எழுதுங்கள்.



## சூழல்மண்டலம் (Ecosystem)

உயிருள்ளதும் உயிரற்றதுமான காரணிகள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் சுற்றுப்புறமே சூழல்மண்டலம். மரங்கள், வயல், குளம், ஆறு, குன்று, காவு (சோலை) போன்றவை சிறிய சூழல்மண்டலங்கள் ஆகும். காடு, புல்வெளி, பாலைவனம், கடல், துருவப் பகுதி போன்றவை பெரிய சூழல்மண்டலங்கள்.

ஒரே சூழல்மண்டலத்தில் உள்ள உயிரினங்கள் ஒன்றையொன்று எவ்வாறு சார்ந்து வாழ்கின்றன? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

- உயிரின, உயிரற்ற காரணிகளுக்கு இடையே.
- 
- 

## சூழல்மண்டலங்களின் அழிவு

### எனக்கும் சொல்வதற்கு உண்டு (குன்று)

நமது ஊரில் பல இடங்களிலும் எங்களைக் காணலாம். குன்றுகளில் ஏறாதவர்கள் யாராவது உண்டா? மண் புழு முதல் குள்ளநரி வரை எத்தனை உயிரினங்களுக்கு நாங்கள் வாழ்விடம் அமைத்துத் தந்துள்ளோம். மேலும் பலவிதமான தாவரங்களுக்கும் மழைநீரை நாங்கள் சேமித்து வைக்கிறோம். நாங்கள் அந்த நீரை பின்னர் கிணறுகளுக்கும், அருவிகளுக்கும், வயல்களுக்கும் வழங்குகிறோம். காற்றைக் கட்டுப்படுத்தவும், வெப்பத்தைக் குறைக்கவும் எங்களால் இயலும்.

நாங்கள் இன்று பெரிய ஆபத்தில் இருக்கிறோம். மனிதர்களாகிய நீங்கள் எங்களது முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்கிறீர்களா?



குன்றின் மனக்குமுறலை வாசித்தீர்கள் அல்லவா?

குன்றுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள் எவை?

சூழல் மண்டலத்தைப் பாதிக்கும் மனிதர்களின் செயல்கள் என்னென்ன என்று கலந்துரையாடி எழுதுங்கள்.

- குன்றுகளை இடித்தல்
- பூச்சிக்கொல்லிகளின் அதிக பயன்பாடு
-
-
-

## மாசடைதல்

மண்புழு கூறுவதைக் கேளுங்கள்.




மண்புழு கூறியதைக் கவனித்தீர்கள் அல்லவா?

உங்கள் வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் காணப்படும் கழிவுகள் என்னென்ன?

உங்களது பள்ளிக்கூடத்தில் கழிவுப்பொருட்களைப் பண்படுத்துவது எவ்வாறு? கண்டறிந்து ஓர் அறிக்கை தயாரித்து வகுப்பில் வெளியிடுங்கள்.

படங்களை உற்றுநோக்குங்கள்




கழிவுப்பொருட்களைச் சுற்றுப்புறங்களில் வீசியெறிவது வாழ்விடங்களுக்குத் தீங்கு விளைவிக்குமல்லவா?

மண்ணை மாசடையச் செய்யும் பிற செயல்கள் என்னென்ன என்று கலந்துரையாடி எழுதுங்கள்.

- விவசாய நிலங்களில் அளவுக்கதிகமாக பூச்சிக்கொல்லி பயன்படுத்துவது.
- அளவுக்கதிகமாக இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது.
-
-

மண் மாசடைதல் சூழல்மண்டலத்தை எவ்வாறு எல்லாம் பாதிக்கிறது? கலந்துரையாடி **எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில்** எழுதுங்கள்.

இதைப் போன்று நமது சுற்றுப்புறத்தில் வேறு எவையெல்லாம் மாசடைகின்றன?

படங்களை உற்றுநோக்கி காற்று மாசடையும் சூழல்கள் எவையென கண்டறிந்து எழுதுங்கள்.






காற்று மாசடைதலால் ஏற்படும் தீமைகள் என்னென்ன? கலந்துரையாடி எழுதுங்கள்.

காற்று மாசடைதல் நமது உடல் நலத்தை மிகவும் பாதிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் காற்று மாசடைதலின் காரணமாக ஏற்படும் பல்வேறு நோய்களின் தாக்கத்தால் உலகளவில் சுமார் 70 லட்சம் மக்கள் இறக்கின்றனர். காற்று மாசடைதல் மனிதர்களை மட்டுமல்லாது விலங்குகளையும் தாவரங்களையும் மிகவும் பாதிக்கிறது.

விவசாய விளைச்சல் குறைவது, அமில மழை, புவி வெப்பமடைதல், ஓசோன் படலத்தில் பாதிப்பு போன்றவை காற்று மாசடைதலின் தீய விளைவுகள் ஆகும்.

படங்களை உற்றுநோக்குங்கள்.





நீர் மாசடையும் சூழ்நிலைகள் என்னென்ன?

நீர் மாசடைவது உயிரினங்களையும் மனிதர்களையும் எவ்வாறெல்லாம் பாதிக்கிறது?

பல்வேறு இரசாயன மற்றும் உயிரி பொருட்கள் கலப்பதால் நீர் மாசடைகிறது. மாசடைந்த நீர் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளையும் நோய்களையும் உருவாக்குகிறது. தொழிற்சாலைகளில் இருந்தும் வீடுகளில் இருந்தும் வெளியேறும் கழிவுகள், நெகிழி கழிவுகள், பூச்சிக்கொல்லிகள், பிற இரசாயனப் பொருட்கள், பெட்ரோலியம் போன்றவை நீர் மாசுபடுதலுக்குக் காரணமாகின்றன. மாசடைதலினால் நீரில் ஆக்சிஜனின் அளவு குறைகிறது. இது நீரில் வாழும் உயிரினங்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமைகிறது.

ஆதியின் நாட்குறிப்பை வாசிப்போம்

# இயற்கை சீற்றம்

30-07-2024

எங்கள் வீடு குன்றின் சரிவில் இருந்தது. நல்ல மழை பெய்யும் பகுதி எங்களுடையது. பருவமழை இடைவிடாமல் பெய்து கொண்டிருந்தது. பலத்த மழை. ஆற்றில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மேலும் நீர்மட்டம் உயர்ந்தால் வீட்டில் தண்ணீர் புகுந்துவிடும். மாலை நேரம் பலத்த மழை தொடங்கியது. மின்சாரமும் இல்லை. மழை தொடர்ந்தால் என்ன நடக்குமோ என்று எங்களுக்குப் பயமாக இருந்தது. அபாய முன்னெச்சரிக்கைகளை நாங்கள் கவனித்துக்கொண்டே இருந்தோம்.

வீட்டில் வளர்க்கும் விலங்குகள் அசாதாரண நிலையில் சத்தம் போடுவது தெரிந்தது. ஆபத்தை உணர்ந்து அப்பாவும் அம்மாவும் எங்களைச் சற்று தூரத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குக்கொண்டு சென்றனர். மழை ஓயவில்லை. நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தோம். அதிகாலையில் எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்தியை நாங்கள் கேள்விப்பட்டோம். நிலச்சரிவில் பலர் இறந்து விட்டனர். அந்த இயற்கை பேரிடரின் கொடூர தாண்டவத்தில் எங்கள் வீடும் பள்ளிக்கூடமும் பல நண்பர்களும், உறவினர்களும், கிராமமும் முழுமையாக அழிந்து போயின.





ஆதியின் நாட்குறிப்பை வாசித்தீர்கள் அல்லவா?

இயற்கை பேரழிவுகள் உலகின் பல பகுதிகளிலும் நிகழ்கின்றன அல்லவா?

உங்களுக்குத் தெரிந்த இயற்கைப் பேரிடர்கள் என்னென்ன? கண்டுபிடித்து எழுதுங்கள்.

- நிலச்சரிவு
- காட்டுத்தீ
- நிலநடுக்கம்
- 
- 
- 

இயற்கைப் பேரிடர்கள் சுற்றுச்சூழலுக்கும் உயிரினங்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இயற்கையாகவோ அல்லது மனிதனின் தலையீட்டீன் காரணமாகவோ இயற்கைப் பேரிடர் ஏற்படலாம்.

(செய்தித்தொகுப்பு) வாசியுங்கள்.




இவை எதைக் குறித்த முன்னெச்சரிக்கைகள்?

வெள்ளப்பெருக்கு முன்னெச்சரிக்கை கிடைத்தால் என்னென்ன முன்னேற்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டும்? நண்பர்களுடன் கலந்துரையாடி உங்கள் கருத்துகளை வகுப்பில் வெளியிடுங்கள்.

இயற்கைப் பேரிடர்களைக் குறித்த முன்னறிவிப்பு வழங்க அமைப்புகள் தற்போது உள்ளன. முன்னெச்சரிக்கைகளின் அடிப்படையில் முன்னேற்பாடுகளைக் கடைபிடித்தால் உயிரையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும்.

## சூழல்மண்டலத்தின் பாதுகாப்பு

நிலத்திலும் கடலிலும் எண்ணற்ற உயிரினங்கள்... அவை இயற்கையோடு இணைந்து வாழும் காட்சி எவ்வளவு அழகாக இருக்கிறது! உயிரினங்கள் அவற்றின் உணவையும், வாழிடத்தையும் கண்டுபிடிப்பது சூழல் மண்டலத்தில் இருந்தாகும். சூழல்மண்டலம்தான் உயிருக்கும், உயிரிய பல்வகைமை நிலைபேற்றிற்கும் ஆதாரம். சூழல் மண்டலத்தைப் பாதுகாப்பது நமது கடமை ஆகும்?

சூழல்மண்டலத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் நாமும் பங்குகொள்வோம்?




## மதிப்பீடு செய்வோம்

1. உயிரினங்களை அவற்றின் வாழிடத்துடன் பொருத்துங்கள்.

| உயிரினங்கள் | வாழிடங்கள் |
|---|---|
| திமிங்கலம் | வனம் |
| பென்குயின் | பெருங்கடல் |
| புள்ளிமான் | பாலைவனம் |
| ஒட்டகம் | துருவப் பகுதி |

2. உங்கள் பகுதியில் உள்ள ஒரு வாழிடத்திற்குச் சென்று, அங்கு காணப்படும் உயிரினங்களின் பெயர்களை எழுதுங்கள். அவை ஒன்றையொன்று சார்ந்திருப்பதைக் கண்டறியுங்கள்.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள உயிரினங்களை அவற்றின் தகவமைப்புடன் வரைந்து இணையுங்கள்.

| | |
|---|---|
|  | செவுள்களின் உதவியுடன் சுவாசிக்கிறது. |
|  | இலைகளில் மெழுகு போன்ற பசை பொதிந்து உள்ளது. |
|  | தோல் மூலம் சுவாசிக்கிறது. |
|  | தண்டில் நீரைச் சேமித்து வைக்க இயலும். |
|  | மணலில் புதைந்து போகாத அகன்ற குளம்புகள் உள்ளன. |

## தொடர் செயல்பாடு

1. உங்கள் வீட்டிலும் அருகிலும் உள்ள 5 வீடுகளுக்குச் சென்று, கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தைப் பயன்படுத்தி கழிவுப்பொருட்களை அழித்தல் தொடர்பான தகவல்களைத் திரட்டுங்கள். குழுவாக ஓர் அறிக்கைத் தயாரித்து வகுப்பில் வெளியிடவும்.

### தகவல் சேகரிப்பு படிவம்

வீட்டுப் பெயர்/எண் :

சென்ற நாள், நேரம் :

வீட்டு உரிமையாளரின் பெயர் :

| வரிசை எண் | கழிவு வகைகள் | பண்படுத்தும் முறை |
|---|---|---|
| 1 | உயிரிக் கழிவுகள் | • தோட்டத்தில் குழி தோண்டிப்புதைக்கிறோம் ☐<br>• சாலையில் வீசி எறிகிறோம் ☐<br>• குழாய் உரக் குழியில் இடுகிறோம் ☐<br>• உரக்குழியில் இடுகிறோம் ☐<br>• பயோபின்னில் இடுகிறோம் ☐<br>• உயிரி எரிவாயு ஆலைகளில் இடுகிறோம் ☐<br>• விலங்குகளுக்குக் கொடுக்கிறோம் ☐<br>• பிற முறைகள் ............................ |
| 2 | நெகிழிக் கழிவுகள் | • பசுமை பாதுகாப்புப் படைக்குக் கொடுக்கிறோம் ☐<br>• மண்ணில் புதைக்கிறோம் ☐<br>• தாவரங்கள் நட பயன்படுத்துகிறோம் ☐<br>• அலங்காரப்பொருட்கள் செய்கிறோம் ☐<br>• சுற்றுப்புறங்களில் வீசுகிறோம் ☐<br>• நீர்நிலைகளில் வீசுகிறோம் ☐<br>• எரிக்கிறோம் ☐<br>• பிற முறைகள் ................................ |
| 3 | நீர் கழிவுகள் | • தோட்டத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறோம் ☐<br>• கழிவு நீர் தொட்டியில் பாய்ச்சுகிறோம் ☐<br>• கழிவுநீர் ஓடையில் விடுகிறோம் ☐<br>• நீர்நிலைகளில் விடுகிறோம் ☐<br>• பிற முறைகள் ............................... |

2. நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரினங்களின் படங்களைச் சேகரித்து டிஜிட்டல் படத்தொகுப்பு தயார் செய்யுங்கள்.

# இந்தியா எனது நாடு

# 2




தேஜசின் பள்ளிக்கூடத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. சமூகஅறிவியல் மன்றத்தின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

மேகா ஆசிரியை ஒவ்வொரு குழுவிற்கும் பொறுப்புகளைப் பகிர்ந்து வழங்கினார்.

தேஜசிற்கும் நண்பர்களுக்கும் சுதந்திர தினத்துடன் தொடர்புடைய இதழ் தயார் செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டது. இதழில் சேர்ப்பதற்கான தகவல்களைத் திரட்ட அவர்கள் நூல் நிலையத்திற்குச் செல்ல தீர்மானித்தனர். அவர்களது முன்னாள் ஆசிரியர் வினயன் தான் நூலகர். குழந்தைகள் ஆசிரியரிடம் நூலகத்திற்கு வந்த நோக்கத்தை விளக்கினர்.



குழந்தைகளே, நமது நாட்டை ஆண்ட வெளிநாட்டினர் யார் எனத் தெரியுமா? ஆசிரியர் கேட்டார்.'

'ஆங்கிலேயர்கள்'என்று பவ்யா ஆவேசத்துடன் கூறினாள்.

'கெட்டிக்காரி'. சரி அவர்கள் எவ்வாறு நமது ஆட்சியாளர்களாக மாறினர் என உங்களுக்குத் தெரியுமா? குழந்தைகள் தெரியாது என்பது போல் ஒருவரையொருவர் பார்த்தனர்.

ஆசிரியர் நூலகத்திலிருந்து ஒரு படக்கதைப் புத்தகத்தை அவர்களுக்கு வாசிப்பதற்காகக் கொடுத்தார்.

நண்பர்கள் ஆர்வத்துடன் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினர்.



1



ஏலம், நல்ல மிளகு போன்ற வாசனைப் பொருட்களும், பட்டு, பருத்தி போன்ற ஆடைகளும் வாங்குவதற்காக வெளிநாட்டினர் கப்பல்களில் முதன்முதலில்இந்தியாவிற்கு வந்தனர்.

2



படிப்படியாக அவர்கள் அரசர்களிடமிருந்து சிறப்புச்சலுகைகளைப் பெற்று இங்கு தொழிற்சாலைகளை நிறுவினர்.

3



இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசர்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாகப் போரிட்டுக் கொண்டிருந்ததினால் வெளிநாட்டினருக்கு எளிதில் அவர்களது பலத்தைப் பெருக்கிக் கொள்ள முடிந்தது.

4



பீரங்கி, துப்பாக்கி போன்ற சிறந்த ஆயுதங்களையும் போர்த் தந்திரங்களையும் பயன்படுத்தி மக்களை அவர்கள் கீழ்ப்படுத்தினர்.

5



படிப்படியாக விவசாயமும் வியாபாரமும் அவர்களது ஆதிக்கத்தின் கீழ் வந்தன. அரசர்களும் அவர்களது கட்டுப்பாட்டிற்குள்ளாயினர். சிறுநாடுகளை அவர்கள் பிடித்துக் கொண்டனர்.

6



சிலவருடங்களுக்குப் பின் இந்தியாவின் முழுப் பகுதிகளிலும் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் செலுத்தினர். அதன் பின்னர்சுமார் 200 ஆண்டுகள் இந்தியா அவர்களது ஆட்சியின் கீழ் இருந்தது.



படக்கதையை வாசித்தீர்கள் அல்லவா? இனி எனது வினாக்களுக்கு விடை கூறுங்கள்.

ஆசிரியர் தொடர்ந்தார். ஆசிரியரின் வினாக்களுக்கு நீங்களும் விடையைக் கண்டுபிடியுங்கள்.

- வெளிநாட்டினர் எதற்காக இந்தியாவிற்கு வந்தனர்?
- வெளிநாட்டினருக்கு இந்தியாவில் அதிகாரம் நிலைநிறுத்த எளிதில் முடிந்தது எவ்வாறு?
- ஆங்கிலேயர்களுடனான போராட்டங்களில் இந்தியர்களுக்கு எதிர்த்து நிற்க இயலாமல் போனது ஏன்?

## ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டங்கள்

ஆங்கிலேயர் ஆட்சியில் நமது நாட்டு மக்கள் மிகவும் துன்பமடைந்தனர் அல்லவா? நீனா கேட்டாள்.

ஆமா!ஆமா! துன்பப்பட்ட மக்கள் பல்வேறு இடங்களில் ஆங்கிலேயருக்கு எதிராக சட்டங்களை மீறியும், ஒத்துழையாமையை அறிவித்தும், ஊர்வலங்கள் நடத்தியும் போராடினர்.

இத்தகைய போராட்டங்கள் தானே **சுதந்திரப் போராட்டம்** என்ற பெயரில் அறியப்படுவது சார்? என்று நவீன் தனது சந்தேகத்தைக் கேட்டான்.

கெட்டிக்காரன்; ஆசிரியர் நவீனின் தோளில் தட்டிப் பாராட்டினார்.

இனி நாம் சுதந்திரப் போராட்டத்தில் உள்ள சில முக்கிய நிகழ்வுகளைத் தெரிந்து கொள்வோம். ஆசிரியர் அலமாரியில் இருந்து ஒரு புத்தகத்தை எடுத்து குழந்தைகளுக்குக் கொடுத்தார்.

புத்தகத்திலிருந்து குழந்தைகள் திரட்டிய தகவல்களை வாசியுங்கள்.

## உப்பு சத்தியாகிரகம் (1930)

அந்தக் காலத்தில் கடல் நீரிலிருந்து உப்பு தயாரிக்கும் தொழிலில் ஏராளமான இந்தியர்கள் ஈடுபட்டிருந்தனர். கொடுங்கோலர்களான ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தியர்கள் உப்பு தயாரிப்பதற்கு வரி (தனித்தொகை) செலுத்த வேண்டும் என அறிவித்தனர். வரி கொடுக்காமல் உப்பு தயாரிப்பவர்களைச் சிறையில் அடைத்தனர். இதற்கு எதிராக காந்தியடிகள் மக்களை ஒன்றுதிரட்டினார்.

மக்கள் காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொலைவில் உள்ள தண்டி கடற்கரைக்கு ஊர்வலமாகச் சென்றனர்.



காந்தியடிகள் கடலில் இருந்து ஒரு பிடி உப்பை எடுத்தபின் கூறினார். "உப்பைப் பிடித்த இந்தக் கைகள் நொறுக்கப்பட்டாலும் உப்பை விட்டுக் கொடுக்க மாட்டோம்".



உப்பு சத்தியாகிரகத்தைக் குறித்த கூடுதல் தகவல்களை ஆசிரியையின் உதவியுடன் கண்டறியுங்கள்

- உப்பு சத்தியாகிரகம் நடைபெற்ற நாள், இடம்.
- காந்தியடிகளின் தலைமை
- தண்டி யாத்திரை

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942)

தொடர்ந்து ஆசிரியர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரரின் நாட்குறிப்பை குழந்தைகளுக்கு வழங்கினார்.

காந்தியடிகளின் அறைகூவலுக்கு ஏற்ப ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில்

*1942 ஆகஸ்ட் 8*

*இன்று சுதந்திரத்திற்கான போராட்டங்களில் எனக்கு மிகவும் ஆவேசமும், பலமும் கிடைத்த நாள் ஆகும். இந்திய தேசிய காங்கிரஸின் மும்பை மாநாட்டில் நான் பங்கு பெற்றேன். இந்த மாநாட்டில் "வெள்ளையனே வெளியேறு" என்ற முழக்கம் எழுந்தது. இந்தியாவை விட்டு வெளியேறு என்பதுதான் இந்த முழக்கத்தின் பொருள். சுதந்திரத்திற்கான மிகவும் பலம் வாய்ந்த போராட்டமாக இது அமைய வேண்டும் என காந்திஜி எங்களை நினைவுபடுத்தினார். "செய் அல்லது செத்துமடி" என பாபுஜி அனைவருக்கும் அறைகூவல் விடுத்தார். இதைக் கேட்ட நான் என்னையும் அறியாமல் எழுந்து நின்று முழங்கையை மடக்கி அந்தமுத்திரை வாக்கியத்தை முழக்கினேன். "வெள்ளையனே வெளியேறு", "வெள்ளையனே வெளியேறு"*

பங்கெடுத்து இருப்பார்கள் அல்லவா சார்? தேஜஸ் கேட்டான்.





கண்டிப்பாக. இந்தப் போராட்டத்தின் முத்திரை வாக்கியம் இந்தியா முழுவதும் முழங்கியது. அது மக்களுக்கு புத்துயிர் அளித்தது. வெள்ளையனே வெளியேறு போராட்டத்தைக் குறித்து வகுப்பு நூலகத்தின் உதவியுடன் தகவல் திரட்டிக் குறிப்பு தயாராக்குங்கள்.

- வெள்ளையனே வெளியேறு தினம்
- தலைமை தாங்கியவர்
- போராட்டத்தின் பலன்.

## சுதந்திரப் போராட்டம் கேரளத்திலும்



கெ. கேளப்பன்

அப்போது கேரளத்திலும் ஏராளம் போராட்டங்கள் நடைபெற்றிருக்கும் அல்லவா சார்? நவீன் கேட்டான்.

ஆமாம். காந்தியடிகளின் தலைமையிலான சுதந்திரப் போராட்டத்தின் ஆவேசம் கேரளத்திலும் அலை வீசியது.

கண்ணூரிலுள்ள பையன்னூர் கடற்கரையிலும் உப்புச்சட்டம் மீறப்பட்டது. போராட்டத்தின் தலைவராக கெ. கேளப்பன் செயல்பட்டார். பின்னர் அவரை 'கேரள காந்தி' என அனைவரும் அழைத்தனர்.

கேரளத்தில் நடைபெற்ற போராட்டங்களுக்கு வேறு யார் யாரெல்லாம் தலைமை தாங்கினர் சார்?

குழந்தைகள் கூடுதல் தெரிந்துகொள்ள ஆவல்கொண்டனர்.

நூற்றுக்கணக்கானோர் உள்ளனர். டி.கெ மாதவன், கெ.பி கேசவமேனோன், முகமது அப்துல் ரஹ்மான், எ.கே கோபாலன், அக்கம்மா செறியான், குட்டிமாளுஅம்மா போன்ற ஏராளமானோர் எனஆசிரியர் கூறினார்.



ஆசிரியர் கூறிய தகவல்கள் அனைத்தையும் குழந்தைகள் குறித்துக்கொண்டனர். சுதந்திரத்திற்காக கேரளத்தில் நடைபெற்ற முக்கிய போராட்டங்கள் எவை என நீங்கள் விசாரித்து எழுதுங்கள்.

- மலபார் கலகம்
-
-
-

## சுதந்திரப் போராட்டத் தலைவர்கள்

### மகாத்மா காந்தி

குழந்தைகளே, இந்தியா முழுவதிலும் சுதந்திரப் போராட்டவீரர்களுக்கு ஊக்கமளித்த தலைவராக இருந்தவர் யார் என உங்களுக்குத் தெரியுமா?

என ஆசிரியர் கேட்க குழந்தைகள் காந்தியடிகள் என சட்டென்று கூறினர்.

நூல் நிலைய புத்தகங்களிலிருந்து காந்தியடிகளைக் குறித்து குழந்தைகள் திரட்டிய தகவல்களை வாசியுங்கள்.



காந்தியடிகள் குஜராத்திலுள்ள போர்பந்தரில் பிறந்தார். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பது அவரது இயற்பெயர். தென்னாப்பிரிக்காவில் அவர் செய்து வந்த வழக்கறிஞர் வேலையை உதறிவிட்டு மீண்டும் இந்தியாவிற்கு வந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றார். எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை, இதயபூர்வமான ஈடுபாடு இவைகளின் காரணமாக மிகவிரைவில் அவர் இந்தியாவின் தலைவராக உயர்ந்தார். உண்மையும் அகிம்சையும் அவரது சொல்லிலும் செயலிலும் நிறைந்து நின்றன. குழந்தைகள் அவரை 'பாபுஜி' என அன்புடன் அழைத்தனர். சம்பாரன் போராட்டம் (1917), ஒத்துழையாமை இயக்கம் (1920), உப்பு சத்தியாகிரகம் (1930), வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942) ஆகியவற்றிற்கு அவர் தலைமை தாங்கினார்.



காந்தியடிகளைக் குறித்த கூடுதல் தகவல்களைப் பள்ளிக்கூட நூலகத்திலிருந்து திரட்டி அவரைக் குறித்த ஒரு சிறு விளக்கக் குறிப்பு தயாராக்குங்கள்.' குழுக்களாகச் சேர்ந்து 'காந்தி இதழ்' தயாரியுங்கள்.




## ஜவஹர்லால் நேரு



வேறொரு தலைவரையும் அறிந்துகொள்வோம். 'கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளிலிருந்து தலைவரை கண்டுபிடிக்கலாமா?' ஆசிரியர் கேட்டார்.

- சுதந்திரப் போராட்டத்தில் முன் வரிசையில் காந்தியடிகளுடன் செயல்பட்டார்.
- இந்தியாவின் முதல் பிரதமர் இவர்தான்.
- இந்தியா சுதந்திரம் பெற்றதை அறிவித்தவர்.
- குழந்தைகள் அவரை அன்புடன் நேரு மாமா என்று அழைத்தனர்.

அனைவரும் சேர்ந்து விடையைக் கூறினர். 'ஜவஹர்லால் நேரு'

ஜவஹர்லால் நேருவைக் குறித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைக் கண்டுபிடியுங்கள்.



- நேருவின் பிறந்தநாள் எது? நாம் இந்த நாளை என்ன தினமாகக் கொண்டாடுகிறோம்?

  ______________________________________________

- நேருவின் சுயசரிதையின் பெயர் என்ன?

  ______________________________________________

கூடுதல் தகவல்களைத் திரட்டி ஜவஹர்லால் நேருவைக் குறித்து ஒரு சொற்பொழிவு தயார் செய்து வகுப்பில் நிகழ்த்துங்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த வேறு சிலரையும் குழந்தைகளுக்கு ஆசிரியர் அறிமுகப்படுத்தினார்.


சுபாஷ் சந்திர போஸ்,


சர்தார் வல்லபாய் பட்டேல்


கோபால கிருஷ்ண கோகலே


சரோஜினி நாயுடு


பால கங்காதர திலகர்


பகத்சிங்


அருணா ஆஸப் அலி


கான் அப்துல் காபர்கான்

சுதந்திரப்போராட்டத்தில் பங்குபெற்ற தலைவர்களை அறிந்து கொண்டீர்களல்லவா?

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களுடன் தொடர்புடைய தலைவர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.





| | |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரஸின் தலைவரான முதல் பெண். இந்தியாவின் வானம்பாடி என அழைக்கப்பட்டவர். | ------------------------- |
| ஆங்கிலேயர்களுக்கு எதிராக வீரத்துடன் ஆயுதம் ஏந்தி போராடியவர். இருபத்து மூன்றாம் வயதில் தூக்கிலிடப்பட்டார். | ------------------------- |
| வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் கதாநாயகி. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மாபெரும் மூதாட்டிஎனவும் அழைக்கப்பட்டார். | ------------------------- |
| சிற்றரசுகளைஇணைத்து இந்தியா என்ற நாட்டை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர். இந்தியாவின் இரும்பு மனிதன் என்று அழைக்கப்படுபவர். | ------------------------- |
| இந்திய தேசியப்படையை உருவாக்கி ஆங்கி லேயர்களுக்கு எதிராகப் போராடியவர். 'நேதாஜி' என அழைக்கப்படுகிறார். | ------------------------- |
| 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை நான்அடைந்தே தீருவேன்' என முழங்கியவர். 'லோகமான்ய' என அழைக்கப்படுபவர். | ------------------------- |
| காந்தியடிகளை அரசியல் பாதைக்கு அழைத்துச் சென்ற குரு "சர்வண்ட்ஸ் ஆப் இந்தியா சொஸைட்டி" என்ற சங்கத்தை நிறுவியவர். | ------------------------- |
| காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றியவர். 'எல்லைக் காந்தி' என்ற பெயரில் அழைக்கப்பட்டவர். | ------------------------- |

பிற சுதந்திரப் போராட்ட வீரர்களின் படங்களைச் சேகரித்து ஒரு சுவர் பத்திரிகை தயார் செய்யவும்.

உங்கள் பகுதியில் சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்களைப் பகிர்ந்து கொள்பவர்கள் இருந்தால் நேர்காணல் நடத்தி தகவல்களைத் திரட்டவும்.

சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய இடங்கள் உங்களது பகுதியில் உள்ளனவா எனவும் விசாரியுங்கள்.

## இந்தியா சுதந்திரத்தை நோக்கி

வினயன் ஆசிரியரிடம் இருந்து திரட்டிய தகவல்களை உட்படுத்தி குழந்தைகள் சுதந்திர தின இதழ் தயார் செய்தனர். மேஹா ஆசிரியை வெளியிட்ட இதழிலுள்ள தகவல்களை வாசியுங்கள்.



சுதந்திரத்திற்காக இந்தியா முழுவதும் ஏராளமான போராட்டங்கள் நடைபெற்றன. காந்தியடிகளைப் போன்ற தலைவர்களின் பேச்சுக்கள் போராட்டங்களுக்கு ஆவேசம் அளித்தது.





சில போராட்டங்கள் கலகங்களாக மாறின. ஏராளமானோர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதங்களை ஏந்திப் போராடினர். அவர்களில் பலர்உயிரிழந்தனர்.

போராட்டங்களுக்குத் தலைமை வகித்த தலைவர்கள் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுடன் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். இந்தியர்கள் மீது கடுமையான சட்டங்கள் திணிக்கப்பட்டன.





இறுதியில் தொடர் போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள்இவற்றின் பலனாக இந்தியாவின் ஆட்சியை இந்தியர்களிடம் அளிக்க ஆங்கிலேயர் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

1947 ஆகஸ்ட் 15-ல் ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்து இந்தியா சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேருஉறுதிமொழி எடுத்து பதவிஏற்றார்.





*"இந்த நள்ளிரவில் உலகம் உறக்கத்தில் இருக்கும்போது இந்தியா சுதந்திரத்திற்காகவும் வாழ்க்கைக்காகவும் விழித்துக் கொள்கிறது"...* அவர் ஆவேசத்துடன் உரையாற்றினார்.

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது தொடர்பான தகவல்களை வாசித்தீர்கள் அல்லவா. பள்ளிக்கூட நூலகத்தைப் பயன்படுத்திக் கூடுதல் தகவல்களைக் கண்டுபிடியுங்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளுக்கு நேராகப் பொருத்தமான அடையாளம் (✓/x). இடுங்கள்.

- இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம் ஏராளமானோரின் உயிர்த்தியாகம் வழியாகப் பெற்றதாகும். ☐
- சுதந்திரம் பெற்றுத் தந்த தலைவர்களை நாம் மரியாதையுடன் நினைவு கூர வேண்டும். ☐
- நமக்குக் கிடைத்த சுதந்திரத்தை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். ☐
- இந்தியர்கள் என்ற நிலையில் நாம் பெருமை கொண்டு நாட்டுப்பற்றை வெளிப்படுத்த வேண்டும். ☐
- ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தை நாம் முறையாகக் கொண்டாட வேண்டும். ☐



சுதந்திரம் கிடைத்தது தொடர்பான பத்திரிகைச் செய்திகளையும் படங்களையும் வலைத்தளத்திலிருந்து திரட்டி ஆசிரியரின் உதவியுடன் ஒரு டிஜிட்டல் படத்தொகுப்பை தயாரியுங்கள்.

## இந்திய அரசியலமைப்பு

பாடப்புத்தகத்தின் முதல் இறுதி பகுதிகளில் அரசியல் அமைப்பின் சில பகுதிகள் உட்படுத்தப்பட்டுள்ளதை கவனித்திருப்பீர்கள் அல்லவா?. அதை வாசியுங்கள். இந்த அரசியலமைப்பை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தது யார் என தெரியுமா?

இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராக இருந்த டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர். இவரது தலைமையில் சுதந்திர இந்தியாவிற்காக புதிய ஒரு சட்டத்தொகுப்பு உருவாக்கப்பட்டது. இந்தவரைவு '**இந்தியாவின் அரசியலமைப்பு**' என்று அறியப்படுகிறது. 1950 ஜனவரி 26 இல் இந்தியாவின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.



குடிமக்களின் உரிமைகள்,கடமைகள், அரசுகள், தேர்தல் இவற்றுடன் தொடர்புடைய சட்டங்கள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வகுப்பு நூலகத்தின் உதவியுடன் விடையைக் கண்டறியுங்கள்.



- அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாளை என்னதினமாக நாம் கொண்டாடுகிறோம்?

  ------------------------------------

- இந்திய அரசியலமைப்பின் சிற்பி என அறியப்படுபவர் யார்?

  ------------------------------------

- எழுத்துவடிவில் அமைந்த மிகப்பெரிய அரசியலமைப்பு உள்ள நாடு எது?

  ------------------------------------

## இன்றைய இந்தியா

குழந்தைகள் நூலகத்திலிருந்து திரட்டிய தகவல்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டனர். மேஹா ஆசிரியை கலந்துரையாடலில் பங்கேற்றார். டீச்சர்! பலமாநிலங்களை ஒன்றிணைத்து இந்தியா என்ற நாடு உருவாக்கப்பட்டதல்லவா? ஜோகன் தனது சந்தேகத்தைக் கேட்டான்.

'ஆமாம்; இவ்வாறு ஒன்றிணைத்த பகுதிகளை ஆட்சி வசதிக்காக மொழியின் அடிப்படையில் பிரித்தனர். இவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதிகள் மாநிலங்கள் என்ற பெயரில் அறியப்படுகின்றன' ஆசிரியை விளக்கினார்.

## மாநிலங்கள்

ஆசிரியை குழந்தைகளுக்கு இந்தியாவின் நிலப்படத்தை அறிமுகப்படுத்தினார். 'இந்தியாவில் தற்போது 28 மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சி மையப் பகுதி தலைநகர் என அழைக்கப்படுகிறது'. இந்தியாவின் மாநிலங்களும் அவற்றின் தலைநகரங்களும் அடையாளப்படுத்திய நிலப்படத்தைக் கவனியுங்கள்.






மாநிலங்களின் அட்டவணையை முழுமையாக்குங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கேரளம் | 8 | | 15 | | 22 | |
| 2 | தமிழ்நாடு | 9 | | 16 | | 23 | |
| 3 | கர்நாடகம் | 10 | | 17 | | 24 | |
| 4 | ஆந்திரப்பிரதேசம் | 11 | | 18 | | 25 | |
| 5 | தெலுங்கானா | 12 | | 19 | | 26 | |
| 6 | கோவா | 13 | | 20 | | 27 | |
| 7 | மகாராஷ்டிரா | 14 | | 21 | | 28 | |

மாநிலங்களையும் அவற்றின் தலைநகரங்களையும் உட்படுத்தி அட்டவணையைத் தயார் செய்து எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில் எழுதுங்கள்.

## மத்தியநேரடி ஆட்சிப்பகுதிகள்

'இந்தியாவில் மாநில அந்தஸ்து இல்லாத சில பகுதிகளும் உள்ளன. இவை மத்திய அரசின் நேரடியான கட்டுப்பாட்டிலாகும். இத்தகைய பகுதிகளைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'

மேஹா ஆசிரியை குழந்தைகளிடம் கேட்டார். நான் கேள்விப்பட்டிருக்கிறேன் இவை யூனியன் பிரதேசங்கள் என அழைக்கப்படுகின்றன.

மிகா கூறினாள். 'ஆம்; இப்போது 8 யூனியன் பிரதேசங்கள் உள்ளன' ஆசிரியை கூறினார்.

இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்கள் எவை என நீங்கள் நிலப்படத்தில் இருந்து கண்டறிந்து எழுதுங்கள்.

இந்தியாவின் நிலப்படத்தை உற்று நோக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளுக்கு விடையைக் கண்டுபிடியுங்கள்.

- இந்தியாவின் அண்டைநாடுகள்
  ---------------------------------------------------------------------------
- அரபிக் கடலின் கரையோரம் உள்ள மாநிலங்கள்
  ---------------------------------------------------------------------------
- வங்காள விரிகுடாவின் கரையோரம் உள்ள மாநிலங்கள்
  ---------------------------------------------------------------------------
- இந்தியாவிலுள்ள மிகவும் சிறிய மாநிலம்
  ---------------------------------------------------------------------------
- மிகவும் கூடுதல் மாநிலங்களுடன் எல்லையைப் பங்கிடும் மாநிலம்
  ---------------------------------------------------------------------

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறுக்கெழுத்து புதிரை நிரப்புங்கள்.






### இடமிருந்து வலம்

1. கேரளத்தின் அண்டைமாநிலம்.தலைநகரம் பெங்களூரு.
2. அரபிக் கடலின் கரையில் அமைந்துள்ளது. குஜராத் மாநிலத்துடன் எல்லையைப் பங்கிடுகிறது.
3. அண்டை நாடான மியான்மர் உடன் எல்லையைப் பங்கிடுகிறது . திரிபுராவின்அண்டைமாநிலம்.
4. கொஹிமா இந்த மாநிலத்தின் தலைநகரம்.
5. வங்காள தேசத்துடன் எல்லையைப் பங்கிடுகிறது. அசாமின் அண்டைமாநிலம்.
6. ராஜஸ்தான், பஞ்சாப், உத்தரப்பிரதேசம் ஆகியவற்றுடன் எல்லையைப் பங்கிடுகிறது. நாட்டின் தலைநகரான டெல்லியுடன் சேர்ந்துள்ளது.

### மேலிருந்து கீழ்

2. பரப்பளவில் இரண்டாவது பெரிய மாநிலம். இந்தியாவின் நடுப்பகுதியில் உள்ளது.
7. இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மாநிலம்.
8. கேரளத்தின் அண்டை மாநிலம். தலைநகரம் சென்னை.
9. இந்த மாநிலத்தில் ஹைதராபாத் உள்ளது.

### கீழிருந்து மேல்

10. நேப்பாளத்துடன் எல்லையைப் பங்கிடுகிறது. பாட்னா தலைநகரம்.

கூடுதல் வினாக்களைக் கண்டறிந்து வகுப்பில் ஒரு வினா விடைப்போட்டி நடத்துங்கள்.

ஒரு அச்சு காகிதம் பயன்படுத்தி இந்தியாவின் நிலப்படத்தை வரைந்து மாநிலங்களை அடையாளப்படுத்துங்கள். அவற்றைக் கட்டியான காகிதத்தில் ஒட்டிய பின்னர் மாநிலங்களின் படங்களை வெட்டி எடுத்து ஜிக்ஸாபுதிர் விளையாடுங்கள்.

## வேற்றுமையில் இந்தியா

இந்தியாவில் பல்வேறு பகுதியிலுள்ளவர்கள் ஒரே மொழிதான் பேசுகின்றனரா?

அனைத்து இந்தியர்களும் ஒரே விதமான ஆடைகளைதான் அணிகின்றனரா?

விழாக்களும் கொண்டாட்டங்களும் இந்தியாவின் எல்லா இடத்திலும் ஒரே போல் உள்ளதா? உங்களது கருத்தைக் கூறுங்கள்.



## ஒரு நாடு பல மொழி

கேரள மக்களின் தாய்மொழி மலையாளம் அல்லவா? நமது அண்டை மாநிலமான தமிழ்நாட்டில் பேசும்மொழி எது? கர்நாடகாவில்?




வேறு என்னென்ன மொழிகள் இந்தியாவில் உள்ளன? கண்டுபிடித்து அட்டவணையை நிரப்புங்கள்.

| மாநிலம் | மொழி |
|---|---|
| ஆந்திரப்பிரதேசம் | தெலுங்கு |
| தெலுங்கானா | |
| மகாராஷ்டிரா | |
| ஒடிசா | |
| | |

இந்திய ரூபாய் நோட்டில் எத்தனை மொழிகளில் ரூபாய் மதிப்பு அச்சிடப்பட்டுள்ளது? என கவனித்துள்ளீர்களா? அவை எவை? விசாரித்து கண்டறிந்து எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில் எழுதுங்கள்.






# ஒரு நாடு பல வேடம்

படத்தை உற்றுக் கவனியுங்கள்.



இந்திய மக்கள் ஆடை அணிவதில் எவ்வளவு வேறுபாடு உள்ளவர்கள் எனப்பார்த்தீர்கள் அல்லவா?



இந்தியாவில் பல்வேறு பகுதியில் உள்ள ஆடை மாதிரிகளின் ஒரு டிஜிட்டல் காட்சியை வகுப்பில் நடத்துங்கள்.

இனி நமது நாட்டில் உள்ள சில பண்டிகைகளை அறிந்து கொள்வோம். படத்தில் உள்ள பண்டிகைகளில் உங்களுக்குத் தெரிந்தவை எவை? இந்தியாவில் உள்ள முக்கிய பண்டிகைகள் எவை ?



- தீபாவளி
- ஈது– உல்–ஃபிதர்
- கிறிஸ்துமஸ்
- 



கூடுதல் பண்டிகைகள், படங்களை உட்படுத்தி ஒரு டிஜிட்டல் படத்தொகுப்பை உருவாக்குங்கள்.



## கலைகள் பல வகை


குச்சுப்பிடி


கதக்


மோகினி ஆட்டம்


மணிப்பூரி


பரதநாட்டியம்

இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஒரே கலை வடிவம்தான் நடைமுறையில் உள்ளதா?

படத்தை உற்றுக் கவனியுங்கள்.

இவற்றில் எந்தெந்த நடன கலைகள் உங்களுக்குத் தெரியும்?

பிற கலைகள் எந்தெந்த மாநிலங்களைச் சார்ந்தவை எனக்கண்டறிந்து அட்டவணையை நிரப்புங்கள்.

| கலை வடிவம் | மாநிலம் |
|---|---|
| மோகினி ஆட்டம் | கேரளம் |
| பரதநாட்டியம் | |
| குச்சிப்பிடி | |
| கதக் | |
| மணிப்பூரி | |

இந்திய மக்கள் மொழியிலும் வேடத்திலும் பண்டிகைகளிலும் கலை வடிவங்களிலும் எந்த அளவிற்கு வேறுபட்டுள்ளனர் என்பதைப் பார்த்தீர்கள் அல்லவா? வேற்றுமைகள் பல இருந்தாலும் இந்தியர்கள் என்ற நிலையில் நம்மை இணைக்கின்ற சில அடையாளங்களைத் தெரிந்து கொள்வோம்.

## ஒற்றுமையின் அடையாளங்கள்

இந்திய தேசியக் கொடியைக் குறித்து நீங்கள் படித்திருக்கிறீர்களா?

வேறு தேசிய அடையாளங்கள் எவை ?

- தேசிய சின்னம்
- தேசிய பாடல்
-
- தேசிய கீதம்
-
-



## தேசிய கீதம்



பள்ளிக்கூடத்தில் நாம் தேசிய கீதம் பாடுவதுண்டல்லவா? ரவீந்திரநாத் தாகூர் எழுதிய 'ஜன கண மன' தான் நமது தேசிய கீதம் ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வகுப்பு நூலகத்தின் உதவியுடன் விடையைக் கண்டுபிடியுங்கள்.

- எந்த மொழியில் தேசிய கீதம் எழுதப்பட்டது ?
- தேசிய கீதம் பாடும்போது எவ்வாறு நிற்க வேண்டும்?
- தேசிய கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் எவ்வளவு?

## இந்தியதேசிய சின்னம்

நமது தேசிய சின்னத்தின் படத்தைப் பாருங்கள். இந்த முத்திரையை எங்கெல்லாம் பார்த்து உள்ளீர்கள்?




பேரரசர் அசோகர் உத்திரப்பிரதேசத்தில் உள்ள சாரநாத்தில் நிறுவிய தூணிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும் இந்திய தேசிய சின்னம். இந்த முத்திரையில் நான்கு திசைகளைப் பார்த்து நிற்கும் சிங்கங்களே முக்கியமானவை. கீழே காணப்படும் தர்மசக்கரம்தான் அசோகச்சக்கரம். அசோகச் சக்கரத்தில் 24 ஆரக் கால்கள் உள்ளன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையைக் கண்டுபிடியுங்கள்.

- முத்திரையின் கீழ் எழுதப்பட்டுள்ள வாக்கியம் எது? அதன் பொருள் என்ன?
- முத்திரையில் உள்ள பிற விலங்குகள் எவை?



## தேசியப்பாடல்



பக்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய "வந்தே மாதரம்" நமது தேசியப்பாடல் ஆகும். வங்காள மொழியில் சமஸ்கிருத சொற்களையும் சேர்த்து இது எழுதப்பட்டுள்ளது.

நண்பர்களுடன் சேர்ந்து பள்ளிக்கூட காலைக்கூட்டத்தில் தேசியப் பாடலை பாடுங்கள்.

இதைப் போன்ற பிற தேசிய அடையாளங்கள் எவை எனக் கண்டுபிடியுங்கள்.

அவற்றின் படங்களையும் தகவல்களையும் திரட்டி வகுப்பில் உள்ள சூழ்நிலையியல் மூலையில் காட்சிப் படுத்துங்கள்.

நமது நாட்டின் மீது செலுத்தும் அன்பையும் மரியாதையையும் தேசிய அடையாளங்களுக்கும் நாம் காட்ட வேண்டும். தேசிய அடையாளங்களிடம் மரியாதை செலுத்தாமல் இருப்பது தண்டனைக்குரியதாகும்.

## இந்தியா நமது பெருமை

ஆங்கிலேயரின் அடிமைத்தனத்திலிருந்து இன்றைய இந்தியாவிற்கு நாம் பயணித்த வழிகளைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா?

ஆயிரக்கணக்கானோரின் உயிரை இழந்து பெற்றதுதான் சுதந்திரம்.

இந்தியர்கள் மொழியிலும் ஆடை அணிவதிலும் வாழ்க்கை முறைகளிலும் வேறுபட்டு காணப்படுகின்றனர்.

இந்த வேற்றுமைகளுக்கு இடையிலும் இந்தியர்கள் என்ற நிலையில் நாம் ஒன்றாக இருக்கிறோம். இந்த ஒற்றுமை உணர்வுதான் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity). இந்தியா நமது பெருமை...

ஒரே குரலில் நாம் ஒன்றாகக்கூறுவோம்.

இந்தியா எனது நாடு!!!... எனது சொந்த நாடு!!!...

இந்தியா எனது உயிருக்கும் மேலான உயிரான நாடு!!!...



## மதிப்பீடு செய்வோம்

1. பொருத்துக

- இந்தியாவின் சுதந்திர தினம் – 1948 ஜனவரி 30
- இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள் – 1942 ஆகஸ்ட் 8.
- வெள்ளையனே வெளியேறு தினம் – 1950 ஜனவரி 26.
- காந்தியடிகள் இறந்த நாள் – 1949 நவம்பர் 26.
- இந்தியாவின் அரசியலமைப்பு நாள் – 1947 ஆகஸ்ட் 15

2. சரியா தவறா என அடையாளப்படுத்துங்கள் (✓/ X).

- கோவா மாநிலம் கேரளத்துடன் எல்லையைப் பங்கிட்டுக்கொள்கிறது. ☐
- அரபிக் கடலுக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இந்தியாவில் கடற்கரை உள்ளது. ☐
- இந்தியாவில் அதிகமானோர் பேசும் மொழி இந்தி ஆகும். ☐
- இந்தியாவிற்கு ஐந்து அண்டைநாடுகள் உள்ளன. ☐

## தொடர் செயல்பாடு

1. இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய படங்களையும் பத்திரிகைச் செய்திகளையும் தகவல்களையும் உட்படுத்தி பள்ளிக்கூடத்தில் ஒரு கண்காட்சி நடத்தவும்.

2. இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களைக் குறித்த தகவல்களை உட்படுத்தி ஒரு டிஜிட்டல் படத்தொகுப்பு தயாரிக்கவும்.



# சிறகுள்ள நண்பர்கள் 3

ஒரு பறவையின் பாடலைக் கேட்க வைத்து ஆசிரியை அன்றைய வகுப்பைத் தொடங்கினார்....

குட்ரூ... குட்ரூ.... குட்ரூ....

இந்தப் பாட்டை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? என ஆசிரியை கேட்டார்.



இந்தப் பாட்டைப் பாடும் பறவை எது? நீங்கள் யாராவது பார்த்திருக்கிறீர்களா?

வகுப்பறை அமைதியானது.

சிறிய குக்குறுவான் என்பது இதன் பெயர் என அயன் கூறினான்.

இந்தப் பறவையின் நிறம் என்ன?

இந்தப் பறவையின் நிறம் பச்சை என சைரா கூறினாள்.

இந்தப் பறவையை பச்சை குக்குறுவான் எனவும் சொல்வார்கள். அவ்வாறு அழைக்க காரணம் என்ன? ஆசிரியை தொடர்ந்தார்...



பலவகை பறவைகள் உள்ளன அல்லவா?

உங்கள் பகுதியில் என்னென்ன பறவைகள் உள்ளன?.

எத்தனை பறவைகளின் பெயர்கள் உங்களுக்குத் தெரியும்?

அவற்றின் பெயர்களை சூழ்நிலையியல் குறிப்பேட்டில் எழுதுங்கள்.

## வண்ணம் தீட்டி அழகுபடுத்துங்கள்.

பறவைகளின் பெயர்களை எழுதுங்கள் வண்ணம் தீட்டி அழகுப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| | | | |

படத்திலுள்ள பறவைகள் எந்தெந்த வகையில் வேறுபட்டுள்ளன?

- இறகுகளின் நிறம்
- உடலமைப்பு
- 
- 

## வகைப்படுத்தலாம்

நமது பகுதியிலுள்ள பறவைகளின் இறகுகள் ஒரே நிறத்தில்தான் காணப்படுகிறதா? பல்வேறு நிற இறகு உள்ள பறவைகளைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அவை எவையெல்லாம்? பட்டியலிடுங்கள்.



| உடலில் ஒரே நிறஇறகு உள்ளவை | உடலில் பல நிறத்தில் இறகு உள்ளவை |
| --- | --- |
|  |  |
| காகம்,...................................... | மயில்...................................... |
| ............................................... | ............................................... |
| ............................................... | ............................................... |

பறவைகளின் பொதுவான தனித்தன்மைகள் என்னென்ன?

சுற்றுப்புறத்தை உற்று நோக்கி பலவகைப் பறவைகளின் தனித்தன்மைகளை நாம் கண்டுபிடிப்போம்.

பறவையை உற்றுநோக்கும்போது தொலைநோக்கி கிடைக்கும் எனில் பயன்படுத்த மறவாதீர்.

உற்றுநோக்கலில் என்னென்ன உட்படுத்தலாம்?

- பறவை காணப்படும் இடம்
- பார்த்த நேரம்
- அளவு
- நிறம்
- கூடு
- சத்தம்
- கால்களின் நிறம், விரல்களின் எண்ணிக்கை, அளவு, நீளம்.
- கண்களின் அளவு, நிறம்.
- இறகுகளின் தனித்தன்மை
- பறக்கும் முறை.
-
-
-



உங்கள் சுற்றுபுறத்திலுள்ள ஏதேனும் ஒரு பறவையை உற்று நோக்கி அதன் தனித்தன்மைகளை உட்படுத்தி குறிப்புத் தயாராக்குங்கள். படம் வரைய மறவாதீர். உற்று நோக்கல் குறிப்பில் உட்படுத்த வேண்டியவை என்னென்ன?

சைராவின் உற்று நோக்கல் குறிப்பை பாருங்கள்

## உற்று நோக்கல் குறிப்பு



| | | |
|---|---|---|
| பறவையின்பெயர் | : | கிளி |
| பார்த்த இடம் | : | வயல்வரப்பு |
| பார்த்த நேரம் | : | மாலைநேரம் |
| நிறம் | : | பச்சை |
| அலகின்சிறப்பு | : | கூர்மையான வளைந்த சிகப்பு நிறம் |
| கால்களின் தனித்தன்மை | : | மரத்தில் ஏறவும் உணவை இறுக்கிப் பிடிக்கவும் உதவும் மெலிந்த கால்கள். |
| வாலின் தனித்தன்மை | : | முக்கோண வடிவில் உள்ள நீண்ட வால். |
| பிற தனித்தன்மைகள் | : | ● கழுத்தில் ரோஸ் நிறத்தில் வளையம்<br>● மரப்பொந்தில் முட்டையிடும். |

## முழுமையாக்கலாம்

மிகப்பெரிய பறவை : ____________________

பின்னோக்கிப் பறக்கும் பறவை : ____________________

மிக உயரத்தில் பறக்கும் பறவை : ____________________

பறக்காத பறவைகள் : ____________________

மிகச்சிறிய பறவை : ____________________

# உணவு பலவிதம்










எல்லா பறவைகளின் உணவும் ஒரேபோல் உள்ளதா?

| பறவை | உணவு |
|---|---|
| கிளி | தானியங்கள்........................................................ |
| மீன்கொத்தி | மீன், ................................................................ |
| பருந்து | ................................................................................ |
| ................................ | ................................................................................ |
| ................................ | ................................................................................ |
| ................................ | ................................................................................ |



தண்ணீர் உள்ள
இடங்களில் நாங்கள்
இரையைத்
தேடுகிறோம்.



இரையை
துரத்திப்பிடிப்பதே
எனக்கு விருப்பம்



விதைகளையும்,
புல்களையும்,
தானியங்களையும்
கொத்தித்தின்பதே
எனக்கு விருப்பம்.

பழங்கள்
தின்பவர்களின்
குழுவில்
நான்.



'ஒவ்வொரு பறவையும்' என்னென்ன உணவுகளை உண்கின்றன? அவற்றைக் கண்டுபிடித்து கூடுதல் பறவைகளின் பெயர்களை கூடுகளில் எழுதுங்கள்.


















எல்லாக்கூட்டிலும் உள்ள பறவைகளின் அளவும், உடலமைப்பும் ஒரேபோல் உள்ளதா? இரை தேடுவதற்கு பறவைகளிடம் உள்ள தகவமைப்புகள் என்னென்ன? எழுதிப்பாருங்கள்.

## வரைந்து இணைப்போம்

பறவைகளின் அலகிற்குப் பொருத்தமான கால்களை இணையுங்கள்.












## பறவைகளும் வாழிடங்களும்

பறவைகளை நாம் எங்கெல்லாம் காணமுடியும்?

- குளக்கரையில்
- 
- 

நீர் நிலைகளில் காணப்படும் பறவைகள் எவை?

........................................................................................................................

அவற்றின் தனித்தன்மைகள் என்னென்ன?

- நீண்டகால்கள்
- 
- 



- எல்லா பறவைகளுக்கும் உடலமைப்பு ஒரேபோல் இல்லை.
- சிலவற்றுக்கு நீண்ட கழுத்துகளும் நீண்ட கால்களும் உள்ளன.
- இரைதேடுவதும் பயணிப்பதும் பறவைகளின் உடலமைப்போடு தொடர்பு கொண்டுள்ளது.
- நீர்நிலைகளில் இரைதேடும் பறவைகளுக்கு எண்ணெய் மயமான இறகுகள் உள்ளன.



### இரவில் பயணிப்பவர்கள்



பகல் உறக்கத்திற்குப் பின் இரவில் இரை தேடு பவை ஆந்தைகள். இரவில் இரை தேடுவதற்கு உதவுவதும், பறக்கும்போது சத்தம் உண்டாக்காத இறகுப் போர்வை இவைக்குள்ளன. சிறு உயிரினங்களைப் பிடித்துண்ணும் கூகைஆந்தை, எலி, பெருச்சாளி போன்றவைகளை உண்ணும் வெள்ளி ஆந்தை. மீன்களை வேட்டையாடும் மீன் ஆந்தை.சுண்டெலிகளை உண்ணும் இரவுபக்கி (Nightjar) இவை எல்லாம் இரவில் பயணிப்பவைகள் ஆகும்.



## பறவைகளும் கூடுகளும்

நம்மைச் சுற்றியுள்ள பறவைகளின் கூடுகளைக் கவனத்திருப்பீர்கள் அல்லவா? கூடுகள் எவ்வாறெல்லாம் வேறுபட்டுள்ளன எனக் கண்டறிந்து நிரப்புங்கள்.











## முட்டைகள் பலவிதம்

படத்தைப்பாருங்கள். இவை எந்தப் பறவைகளின் முட்டைகள்?














பறவைகளின் முட்டைகள் எவ்வாறெல்லாம் வேறுபட்டுள்ளன?

- அளவு
-
-

பலவித பறவைகளையும் அவற்றின் கூடுகள், முட்டைகள், இவற்றின் படங்களையும் சேகரித்து தனித்தன்மைகள் கண்டுபிடித்துத் தொகுப்பு உருவாக்குங்கள்.

பறவைக் கூடுகளின் வடிவம், அளவு, கூடுகட்ட பயன்படுத்தும் பொருட்கள், கூடுகட்டும் இடம், கூடுகட்டும் முறை, முட்டைகள் போன்றவற்றில் வேற்றுமைகள் உள்ளன.

### ஒட்டகப்பறவையும் முட்டையும்



உலகத்தில் இன்று உயிரோடிருக்கும் பறவைகளில் மிகப்பெரிய பறவையான ஒட்டகப்பறவையின் முட்டையே மிகப்பெரிய முட்டை. சிறகுகள் இருந்தாலும் பறக்க இயலாத ஒட்டகப்பறவையின் முட்டை சுமார் ஒன்றரைக் கிலோ எடையுள்ளது. மட்டுமின்றி கரையில் வாழும் உயிரினங்களில் மிகப்பெரிய கண்ணும் ஒட்டகப்பறவைக்கே உள்ளது.



## வலசைப்பறவைகள்



பச்சை வார்ப்ளர்
(Green Warbler)



பொன்தொட்டான்
(Indian Pitta)



அரசவால் ஈ பிடிப்பான்
(Indian Paradise Flycatcher)



தங்கமாங்குயில்
(Indian Golden Oriole)



பொன்னிற உப்புகொத்தி
(Pacific Golden Plover)



காட்டுவாலாட்டி
(Forest Wagtail)

படத்தில் காணப்படும் பறவைகளை நாம் எல்லாக்காலத்திலும் பார்ப்பதுண்டா? இவற்றின் சத்தம் எல்லாக்காலத்திலும் கேட்பதுண்டா? காரணம் என்ன?

பாதகமான காலநிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் உணவு, இனப்பெருக்கம் செய்வதற்காகவும் சிலவகையான பறவைகள் கூட்டமாக ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்குச் செல்கின்றன. காலநிலை சீரானவுடன் அவைத் திரும்பி வருகின்றன. இப்பறவைகளே வலசைப் பறவைகள்.

கூடுதல் வலசைப்பறவைகளின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுங்கள். படங்களைச் சேகரித்து சூழ்நிலையியல் மூலையில் உள்ள பலகையில் ஒட்டுங்கள்.



## பறவைகளும் சுற்றுச்சூழலும்



சில கட்டிடங்களின் மீது ஆலமரம் வளர்ந்திருப்பதை நீங்கள் கவனித்து இருக்கிறீர்களா? அதை யாராவது நட்டு வைத்ததா?

பறவைகளால் நமக்கு என்னென்ன நன்மைகள் உள்ளன?



- விதை பரவுதல்
-
-

## தாகத்திற்குத் தண்ணீர் தேடி

நீரூற்றுகளும் நீர்நிலைகளும் வற்றிப்போகும் கோடைகாலத்தில் பறவைகளும் விலங்குகளும் தாகம் தீர்ப்பது எவ்வாறு?

கோடைகால வெப்பத்திலிருந்தும் வறட்சியிலிருந்தும் பறவைகளைப் பாதுகாக்க தண்ணீர் வைக்கலாம். இதற்காக மரத்திலோ, மரத்தின் அடியிலோ, பிற இடங்களிலோ மண் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி வைக்கலாம். கொசு முட்டையிடாமலிருக்க அடிக்கடி தண்ணீரை மாற்ற வேண்டும்.



பறவைகளுக்கு தண்ணீர் மற்றும் உணவு வைப்பதற்கான ஒரு இடத்தினை உங்கள் பள்ளியில் அமையுங்கள்.

## மலைமுழக்கி வேழாம்பல் (இருவாச்சி) இன அழிவின் பாதையில்...

"காட்டின்விவசாயி" என்ற புனைபெயரில் அறியப்படும் கேரள மாநில பறவையான மலைமுழக்கி வேழாம்பல் இன அழிவை நோக்கிச் செல்கிறது.



மலைமுழக்கி வேழாம்பல், சிட்டுக்குருவி போன்ற பறவைகளின் எண்ணிக்கை இப்போது குறைந்து கொண்டே வருகிறது. இதன் காரணமென்ன?

- உணவுப் பொருட்கள் கிடைக்காமை
- உயரம் கூடிய மரங்கள் இல்லாதது
- மனித நடமாட்டம்
-
-
-

இன அழிவை நோக்கிச் செல்லும் உயிரினங்களைப் பற்றி எடுத்துரைக்கும் புத்தகம் "சிவப்பு தரவு புத்தகம்" (RED DATA BOOK).

இன அழிவை எதிர்கொள்ளும் கேரளத்திலுள்ள பிற பறவைகளின் பெயர்களைக் கண்டுப்பிடித்து எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில் எழுதுங்கள். படங்கள் சேகரித்து படத்தொகுப்பைத் தயாராக்குங்கள்.



## பறவை ஆர்வலர்கள்

சலீம் தனது 10 வதுவயதில் மாமா பரிசாக அளித்த துப்பாக்கி (AIR Gun) பயன்படுத்தி மஞ்சதாலி என்ற குருவியைச் சுட்டுவீழ்த்தினான். அந்தக் குருவியுடன் பம்பாய் (மும்பை) இயற்கை வரலாற்று சங்க அதிகாரியாக இருந்த மாமாவின் நண்பரான W.H மிலாடு என்பவரை இருவரும் சந்தித்தனர். அவர் அந்தச் சங்கத்தில் பாதுகாத்து வைத்திருந்த பறவைகளின் தொகுப்பை அறிமுகம் செய்தார். அதில் சலீம் சுட்டு வீழ்த்திய மஞ்சதாலி போன்ற குருவிகளும் இருந்தன. இந்தச் சந்திப்பு பின்னர் அவரை ஒருபறவை ஆர்வலராக மாற்றியது.



டாக்டர். சலீம் அலி

இது இந்தியாவிலுள்ள பிரபலமான பறவை ஆர்வலரான சலீம் அலியின் வாழ்க்கை குறிப்பின் பகுதியாகும்.

இவரின் பிறந்த நாளான **நவம்பர் 12** தேசிய பறவை உற்றுநோக்கல் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

வேறு எந்தெந்த பறவை ஆர்வலர்களை உங்களுக்குத் தெரியும்?. கூடுதல் தகவல்களைச் சேகரித்து எழுதுங்கள்.



கே.கே நீலகண்டன்என்ற இந்துசூடன்.



டாக்டர். ஆர். சுகதன்.

பறவைகளைப் பற்றிய ஆய்வுடன் தொடர்புடைய அறிவியல் பிரிவே பறவையியல் (Ornithology).

## பறவைகள் சரணாலயம்

டாக்டர் சலீம்அலியின் பெயரில் கேரளத்தில் உள்ள பறவைகளின் சரணாலயம்தான் தட்டேக்காடு பறவைகள் சரணாலயம்.

வேறு எந்தெந்த பறவைகள் சரணாலயம் பற்றி உங்களுக்குத் தெரியும்?

குறுக்கெழுத்து புதிர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கு | | | | |
| 3 த | | 4 ம | | |
| | | | | |
| | | | | |
| | 2 சூ | | | |
| | | | | 5 |
| | | | | |
| | | | | லூ |
| | | | | |
| | | | | |

### இடமிருந்து வலம்

1. கோட்டயம் மாவட்டத்தில் உள்ள பறவைகள் சரணாலயம்
2. கேரளத்தில் உள்ள மயில் பாதுகாப்பு மையம்

### மேலிருந்து கீழ்

3. டாக்டர் சலீம் அலி பறவைகள் சரணாலயம் என்ற பெயரில் அறியப்படுவது.
4. கண்டல் காடுகளில் அமைந்துள்ள கேரளத்தின் பறவைகள் சரணாலயம்.
5. வலசைப் பறவைகள் அதிகமாகக் காணப்படும் கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள பறவைகள் சரணாலயம்.

கூடுதல் பறவைகள் சரணாலயம் பற்றி தகவல் சேகரித்து எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில் எழுதுங்கள்.





காகம், கோழி, மைனா, மயில், வேழாம்பல், கொண்டைக் குருவி போன்ற இலட்சக்கணக்கான பறவைகள் நிறைந்தது உயிரினங்களின் உலகம். இனிமையான குரலும் பல்வேறு நிறங்களும் வேறுபட்ட பயணித்தலும் நிறைந்த பறவைகள் இனியும் எத்தனையோ!

விசாரித்தும் கண்டுபிடித்தும் சிறகுள்ள நண்பர்களின் உலகத்தை நோக்கி நாம் அற்புதமான பயணத்தை தொடர்வோம்.

## மதிப்பீடு செய்வோம்

1. பறவைகளையும் அவற்றின் உணவினையும் இணைக்கும் சரியான வழியைப் பொருத்துங்கள்.



2. ஹாய் இது மரங்கொத்தியா? குளக்கரையில் இக்குருவியைப் பார்த்தபோது ரோபி உரக்க கூறினான். மரங்கொத்தியின் அலகு இவ்வாறல்ல அயன் கூறினான். இது என்ன பறவை? பொருத்தமான வண்ணம் தீட்டி படத்தை முழுமையாக்குங்கள்.



தனித்தன்மைகளை உட்படுத்தி குறிப்புத் தயாராக்குங்கள்.

3. மான்சனும் அபினும் அட்டவணையை முழுமையாக்கி விளையாடினர். அவர்களோடு சேர்ந்து அட்டவணையை முழுமையாக்குங்கள்.

| பறவையின் பெயர் | நிறம் | உணவு | உடலமைப்பு | கூட்டின் சிறப்புகள் |
|---|---|---|---|---|
| கிளி | | | | |
| | கருப்பு | | | |
| | | சிறு உயிரினங்கள் | | |
| | | | நீண்ட கழுத்து | |
| மரங் கொத்தி | பச்சை கலந்த மஞ்சள்/ மஞ்சள் கலந்த தவிட்டு நிறம் | சிறு பிராணிகள், புழுக்கள் | கூர்மையான அலகு, தலையில் சிகப்புத் தொப்பி | மரப் பொந்தில் |

## தொடர் செயல்பாடு

1. **படத்தொகுப்பை உருவாக்கலாம்,**

பலவிதமான பறவைகளின் படங்களை வரைந்தோ ஒட்டியோ பறவைகளின் படத்தொகுப்பை உருவாக்குங்கள்.



2. பல்வேறு பறவைகளின் இறகுகளைச் சேகரித்து அவற்றைச் சேர்த்து வைத்து வெவ்வேறு வடிவங்கள் உருவாக்குங்கள்.

3. 'சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பறவைகளின் பங்கு' – தலைப்பில் சிறு நாடகம் தயாராக்கி வகுப்பில் வெளியிடுங்கள்.

# கலைகளின் கேரளம் 4



இன்று நான் பள்ளிக்கலை விழாவில் முதன்முறையாக இரண்டு பரிசுகளைப் பெற்றேன். நாட்டுப்புற நடனப் போட்டிக்கு முதல் பரிசும், மெல்லிசைப் பாடலுக்கு இரண்டாவது பரிசும். நான்காம் வகுப்பு நண்பர்களின் நாடகம் முதலிடம் பெற்றது. எனக்கு மிகவும் பிடித்தது சனோஜின் சொற்பொழிவும் நிளாவின் தனிநபர் நடிப்பும் ஆகும்.

நீதுவின் நாட்குறிப்பை வாசித்தீர்கள் அல்லவா?

நீதுவிற்கு என்னென்ன போட்டிகளில் பரிசுகள் கிடைத்தன?

பள்ளிக் கலைவிழாவில் என்னென்ன போட்டிகள் நடைபெறும்?

மேடையில் நடைபெறும் போட்டிகள் எவை? மேடை சாரா போட்டிகள் எவை? பட்டியலிடுங்கள்.



கலைவிழாவில் வெற்றிபெற்றவர்களின் வண்ணப் படங்களை செய்தித்தாளில் பார்த்த நிளா அம்மாவிடம் கேட்டாள், அம்மா, திருவாதிரையில் பெண் குழந்தைகள் மட்டுமா பங்கேற்பார்கள்?

அம்மா: ஆம் மகளே, திருவாதிரை பெண்களின் குழுநடனமாகும்.

இது தனுமாதத்தில் (மார்கழி மாதம்) திருவாதிரை திருநாளின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது. குத்துவிளக்கை ஏற்றி அதன் சுற்றிலும் நின்று கைதட்டி ஆடப்படும் ஒரு நடனம் ஆகும்.



திருவாதிரை

நிளா : கலைவிழாவில் மார்க்கம்களி நடந்த போதும் கூட குத்துவிளக்கு இருந்ததே அம்மா?

அம்மா : ஆமாம். மார்க்கம்களிக்கு நடுவிலும் குத்துவிளக்கை ஏற்றிவைப்பதுண்டு. கிறிஸ்தவ சமயவரலாற்றை விளக்கும் பாடல்கள் மார்க்கம்களியில் பாடப்படுகிறது.



மார்க்கம் களி

மார்க்கம்களியில் சட்டை, வேட்டி அணிந்து நடனமாடுகின்றனர். திருவாதிரை நடனம் கேரள வேடம் அணிந்து ஆடப்படுகிறது.

அம்மா : பெண்கள் வட்டமாக நின்று நடனமாடும் வேறு ஏதேனும் கலை வடிவம் உனக்குத் தெரியுமா?

நிளா : ஒப்பனையையும் வட்டப்பாட்டையும் வட்டமாக நின்று ஆடுகின்றனர்.

அம்மா : சரிதான். முஸ்லீம் சமூகத்தில் பிரபலமான ஒப்பனை மற்றும் வட்டப்பாட்டை வட்டத்தில் நின்று ஆடுகின்றனர். ஒப்பனை நடனத்தின் போது நடுவில் யாரையாவது ஒருவரை உட்கார வைத்திருப்பதைக் கண்டதுண்டா?

நிளா : அது மணப்பெண் அல்லவா?

அம்மா : ஆமாம், திருமண விழாவின் போது நிகழ்த்தப்படும் குழுநடனமாகும். ஒப்பனை ஆடுபவர்கள் மணமகளைச் சுற்றி நின்று நடனமாடுவர். வட்டப்பாட்டு நிகழ்த்துபவர்கள் யார் தெரியுமா?



ஒப்பனை

நிளா : ஆண் குழந்தைகள் அல்லவா?

அம்மா : ஆம் வட்டப்பாட்டு ஆண்களால் நிகழ்த்தப்படுகிறது. எனவே இது 'ஆண் ஒப்பனை' என்றும் அழைக்கப்படுகிறது.

நிளா : மங்கலம்களியும் வட்டத்தில் நின்றுதானே நடத்தப்படுகிறது. அதன் புகைப்படம் நாளிதழில் உள்ளது அல்லவா?.

அம்மா : காசர்கோடு, கண்ணூர் மாவட்டங்களில் மங்கலம் களி பிரபலமானது. இதுவும் திருமண விழாவுடன் தொடர்ந்து நடத்தப்படும் ஒரு கலை வடிவமாகும்.

நிளா : மங்கலம்களி பெண்கள் அல்லவா ஆடுகின்றனர்?



மங்கலம் களி

அம்மா : முக்கியமாக, மங்கலம் களியில் பெண்கள் குழுவாக நடனமாடுவார்கள். ஆண்கள் கைகளைத்தட்டி பாட்டு பாடுவார்கள். இது 'கல்யாணக்களி' என்றும் அழைக்கப்படுகிறது.

அம்மா அதனைத் தொடர்ந்து தென் கேரளத்தில் உள்ள பிரபலமான வில்லுப்பாட்டைக் குறித்தும் விவரித்தார்:

இசைக் கருவிக்காகத் தயாரிக்கப்பட்ட பெரிய வில், குடம், வீசுகோல், ஆகியவற்றைப் பயன்படுத்தி தாளத்துடன் வில்லுப்பாட்டு நடைபெறும். பாட்டுடன் கூடிய உரையாடலும், அசைவும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு மெருகூட்டுகிறது.



வில்லுப்பாட்டு

- கேரள வேடம் அணிந்து பெண்கள் வட்டத்தில் நின்று திருவாதிரைக்களி நடனம் ஆடுவார்கள்.
- மார்க்கம் களியின்போது கிறிஸ்தவ சமய வரலாற்றை விளக்கும் பாடல்கள் பாடப்படும்.
- மணமகனின் குணங்கள் மணமகள் அறியும் பொருட்டு ஒப்பனைப் பாடல் வழியாக பாடப்படுகிறது.
- வேட்டையாடுதல், தொழில், சடங்குகள் என வாழ்க்கை தொடர்பான எந்த விஷயமும் மங்கலம் களியின் கருப்பொருளாக இருக்கலாம்.
- வில்லுப்பாட்டு வரவேற்புப் பாடலுடன் தொடங்குகிறது. பின்னர் கதைப் பாடல்கள் அரங்கேற்றப்படும்.

## தெய்யம்



தெய்யம் என்பது கலை உணர்வும் பக்தியும் நிறைந்த சடங்குக்கலையாகும். இக்கலைவடிவம் வட கேரளத்தில் பிரபலமாக உள்ளது. இது தெய்யாட்டம், களியாட்டம் போன்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. தெய்வம் என்ற சொல்லில் இருந்து தெய்யம் என்ற சொல் உருவானது என்பர். எனவே தெய்யாட்டத்தை தெய்வத்தின்வேடம் பூண்ட ஆட்டம் என்றும் கூறலாம். தெய்யம் ஆட்டத்திற்கு ஒரு சீரான ஆட்டமுறை உள்ளது. இதற்கு முக்கிய கருவியாகச் செண்டை பயன்படுத்தப்படுகிறது. மத்தளம், இலத்தாளம், கொம்பு போன்ற பல்வேறு இசைக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இசைக் கருவிகளின் தாளத்திற்கு ஏற்ப தெய்யம் ஆடப்படுகிறது.

குறுக்கெழுத்து புதிரை படங்களைப் பார்த்தும், அறிவுறுத்தலுக்கு ஏற்பவும் நிரப்பவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | | | | | |
| 2 | | | | 3 | | | | | |
| 4 | | | 5 | | | 7 | | | |
| 6 | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

**இடமிருந்து வலம்**

1. 

2. 

3. 

4. தெய்யத்திற்குப் பயன் படுத்தப்படும் முக்கிய இசைக்கருவி.

5. 

6. 

**மேலிருந்து கீழ்**

7. 

படத்தில் காணப்படும் நடன வடிவங்கள் எவையென கண்டுபிடித்து எழுதுங்கள்.





........................................ ........................................






........................................ ........................................

இந்தக் கலை வடிவங்களைப் பற்றிய கூடுதல் தகவல்களைச் சேகரித்து எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டில் எழுதுங்கள். பல்வேறு நடன வடிவங்களின் படங்களைச் சேகரித்து இதழ் உருவாக்குங்கள்.

நீது எந்தக் கலைப்பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றாள்?

மெல்லிசைப் பாடலைப் போன்று இசைக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கும் பிற இசை வடிவங்கள் எவை?

- கர்நாடக இசை
- 
- 

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாய்தாரைப்பாடலை அனைவரும் சேர்ந்து பாடுவோமா?

'ஓ... தித்தித்தாரா தித்தித்தை தித்தை தகதெய்தெய் தோம்'... தொடர்ந்து வரும் வரிகளைப் பாடிப் பாருங்கள்.

### நாட்டுப்புறப் பாடல்கள்

பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாகப் பாடப்பட்டவை. ஒவ்வொரு பகுதியிலும் காணப்பட்ட சடங்குகள், கலாச்சாரங்களுடன் தொடர்புடையவை நாட்டுப்புறப் பாடல்கள். இவை பேச்சு மொழியுடன் நெருங்கிய தொடர்புடையவை. விவசாயம், தொழில், பொழுதுபோக்கு, சடங்குகள் போன்ற பல்வேறு பிரிவுகளில் நாட்டுப்புறப் பாடல்கள் உள்ளன.

### கர்நாடக இசை

சரியானபாடல் முறைகளுடன் ஒழுங்காகப்பாடப்படும் மற்றொரு சங்கீத வகையாகும் கர்நாடக இசை. கர்நாடக சங்கீதத்தின் இரு பிரிவுகளான கர்நாடக இசைக்கும் இந்துஸ்தானி சங்கீதத்திற்கும் கேரளம் மிகுந்த பங்களிப்பை அளித்துள்ளது.

ஆட்சியாளராக இருந்த சுவாதி திருநாள் சங்கீதத்தில் புலமை பெற்றவர். மலையாளம், இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இவர் இயற்றியுள்ளார்.

### மாப்பிள்ளைப் பாடல்

முஸ்லிம் சமுதாயத்தில் மிகப் புகழ்பெற்ற பாடல்களாக மாப்பிள்ளைப் பாடல்கள் அறியப்படுகின்றன. வடகேரளத்தின் முஸ்லீம் சமூகத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த மலையாள மொழியில் (அரபிமலையாளம்) இந்தப் பாடல்கள் பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன. மாப்பிள்ளைப் பாடல்கள் இயற்றியவர்களில் முக்கியமானவர் மோயின்குட்டி வைத்தியர் ஆவார்.

பள்ளிக் கலைவிழாவில் ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல் போன்ற போட்டிகளில் நீங்கள் பங்கெடுத்துள்ளீர்களா?

இந்த ஓவியங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?





இவை உலகப்புகழ்பெற்ற ஓவியரான, கேரளத்தைச் சேர்ந்த ராஜா ரவி வர்மா வரைந்த ஓவியங்களாகும்.இவர் நவீன ஓவியக் கலையைக் கேரளத்திற்கு அறிமுகப்படுத்தினார். தொழில்நுட்பத்தின் மூலம் அவரது ஓவியங்களுக்கு இயக்கம் கொடுக்கப்பட்டுள்ள வீடியோக்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?



- ராஜா ரவி வர்மாவினுடைய ஓவியங்களின் பிரதிகளைச் சேகரித்து, உங்கள் பள்ளியில் ஓர் ஓவியக் கண்காட்சி நடத்துங்கள்.

## பண்டிகைகள்... கொண்டாட்டங்கள்...




திருச்சூர் பூரம் கேரளாவின் புகழ்பெற்ற திருவிழாக்களில் ஒன்றாகும்.



திருவிழாக்களில் கலந்துகொள்ள உங்களுக்கு விருப்பம் உண்டல்லவா?

உங்கள் ஊரிலும் விழாக்கள் உள்ளதல்லவா? அவை எவை?

உங்கள் பகுதியில் உள்ள முக்கியமான திருவிழாக்கள் குறித்து தகவல் சேகரித்து ஒரு சுவரொட்டியை தயாரியுங்கள்.

'மாவேலி நாடுவாணீடும் காலம்
மனுஷர் எல்லாரும் ஒண்ணுபோல
ஆமோதத்தோடே வசிக்கும் காலம்
ஆபத்தங்கார்க்கும் ஒட்டும் இல்லதானும்'.

இந்த ஓணப்பாடலை கேட்டிருக்கிறீர்களா? தொடர்ந்து வரும் வரிகளை கண்டுபிடித்து இந்த மெட்டில் பாடுங்கள்.

நிளாவின் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற ஓணக் கொண்டாட்டத்தின் புகைப்படங்களைப் பாருங்கள்.









நமது தேசியவிழா அல்லவா ஓணம்? உங்கள் பள்ளியிலும் வீட்டிலும் ஓணம் எவ்வாறு கொண்டாடுகிறீர்கள் என்பதை எனது சூழ்நிலையியல் குறிப்பேட்டியில் எழுதுங்கள்.

படத்தில் காணப்படும் பண்டிகைகள் பற்றிய தகவல்களைத் திரட்டி ஒரு குறிப்பு தயாரிக்கவும்.





நீங்கள் கலந்துகொள்ள விரும்பும் பிற விழாக்களும் பண்டிகைகளும் உள்ளன அல்லவா? அவை என்னென்ன என்பதை எழுதுங்கள். நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## மதிப்பீடு செய்வோம்

1. பொருத்தமானவற்றை வரைந்து இணைக்கவும்.

| | |
|---|---|
| • ஓட்டம் துள்ளலை தோற்றுவித்தவர் | • இராஜா ரவிவர்மா |
| • மாப்பிளைப்பாட்டில் புகழ் பெற்றவர் | • சுவாதி திருநாள் |
| • உலகப் புகழ்பெற்ற ஓவியர் | • மோயின்குட்டி வைத்தியர் |
| • இசைவித்துவான், ஆட்சியாளர் | • குஞ்சன் நம்பியார் |

2. கேரளத்தின் முக்கிய கலைகள் எவை? குறிப்பு தயாராக்குங்கள்.

## தொடர் செயல்பாடு

1. ஆசிரியையின் உதவியுடன் ஒரு கலைஞரைப் பள்ளிக்கூடத்திற்கு அழைக்கவும். கலை நிகழ்ச்சியை இரசிக்கும் வாய்ப்பை உருவாக்குங்கள்.
2. கேரளாவின் கலைவடிவங்களின் படங்களை உட்படுத்தி ஒரு படத்தொகுப்பை உருவாக்குங்கள்.
3. ஓணத்துடன் தொடர்புடைய விளையாட்டுகளையும் கலைவடிவங்களையும் கண்டறிந்து இதழ் தயாரியுங்கள்.

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***